01. உங்கள் பாடநூலில் அலகு 1,2 ஐ அடிப்படையாகக் கொண்டு விடை தருக.

எலியா



எலியா விதவையின் மகனைப் பெறுதல்

லூயிஸ் ஓவியம்

தீர்க்கதரிசி

பிறப்பு	திஸ்பே, கிலாத்
ஏற்கும் சபைசமயம்	யூதம் கிறித்தவம் இசுலாம்
திருவிழா	சூலை 20
சித்தரிக்கப்படும் வகை	தீர்க்கதரிசி, அற்புதம் செய்பவர்

எலியா (ஆங்கில மொழி: *Elijah*, "யாவே என் கடவுள்" எனும் பொருளுடைய எபிரேயம்: என்பவர் 1 அரசர்கள் குறிப்பிடுகின்றபடி, கி.மு. 9ம் நூற்றாண்டில் அகாப் அரசன் காலத்தில் கென் கெரோவ் ஊரில் வாழ்ந்த பெற்ற தீர்க்கதரிசியும் அற்புதம் செய்பவரும் ஆவார்.[

இறைவாக்கினர் அல்லது **தீர்க்கதரிசி** (*prophet*) எனும் நபர் இயற்கைக்கு அப்பாற்பட்ட அல்லது தெய்வீகத் தன்மை கொண்ட பண்பு கொண்டவர் எனவும், அதற்காக பேசுபவர் எனவும் சமயங்களினால் நோக்கப்படுகின்றார். இவர் மானிடத்திற்கு இடையிலான சேவையைச் செய்து, இயற்கைக்கு அப்பாற்பட்ட இருக்கிவிருந்து பகிர்ந்து பெற்ற அறிவை அல்லது செய்தியை மக்களுக்கு வழங்குபவர் என நோக்கப்படுகின்றார். இவ்வாறு அவரிடமிருந்து பெறப்படும் செய்தி இறைவாக்கு அல்லது தீர்க்கதரிசனம் எனப்படும்.

www.ikeuk

1) இறைவாக்கினரை எபிரேய மொழியில் எவ்வாறு அழைப்பர்?
2) "பிறொவ்படெஸ்ட்" என்பதன் அர்த்தம் யாது?
3) இஸ்ராயேல் இறைவாக்கினர்களை வகைப்படுத்துக?
4) இறைவாக்குரைப்போர் மூவரைக் குறிப்பிடுக?
5) பெரிய இறைவாக்கினர்களைப் பெயரிடுக?
6) சிறிய இறைவாக்கினர்கள் ஐவரைப் பெயரிடுக?
7) உரியாவின் மனைவி பெயர் யாது?
8) அரசன் தாவீதின் பிழையை சுட்டிக்காட்டிய இறைவாக்கினர் யார்?
9) இறைவாக்கினர் எலியா பஞ்சகாலத்தில் எங்கே வாழ்ந்து வந்தார்?
10) காகங்கள் அப்பமும் இறைச்சியும் யாருக்கு கொண்டு வந்து கொடுத்தன?
11) இறைவாக்கினர் எலியா மூலம் "இறைபராமரிப்பை" பெற்றுக்கொண்டவர் யார்?
12) கார்மேல் மலையில் பலி ஒப்புக்கொடுத்தவர் யார்?
13) எலியாவைப் பின்பற்றிய இறைவாக்கினர் யார்?
14) கார்மேல் மலையில் எத்தனை பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன?
15) எலியா எவ்வாறு எலிசாவை இறைவாக்கினர் பணிக்கு தேர்ந்தெடுத்தார்?

02. பாடநூல் பக்கம் 8 ஐ பார்க்க.

1) சிரியா மன்னின் படைத் தலைவன் யார்?
2) இறைவாக்கினர் எலியா "இறைபராமரிப்பை" எவ்வாறு அனுபவித்தார்?
3) நீர் உமது வாழ்வில் இறைபராமரிப்பை அனுபவித்த சந்தர்ப்பமொன்றை எழுதுக?

03. பாடநூல் பக்கம் 3,4 ஐ பார்க்க.

1) இறைவனின் குரலை வெளிப்படுத்தும் ஊடகம் எது?
2) இறைவாக்கினர்களின் பண்புகளைத் தருக?
3) இறைவாக்கினரின் வாழ்விலிருந்து நீர் பெறும் படிப்பினையிலிருந்து செய்யக்கூடிய செயல்கள் 5 தருக?

www.kedu.lk